DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| STC.NO. 5313/2014 | Crime No.: | Station : |
| DW : 2 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | ரேணுகா | Caste | |
| Spouse Name | ரமேஷ் | Calling | பியூட்டி பார்லர் |
| Village | மலையடிப்புதூர் | Religion | |
| Taluk | | Age | 42 |

| | |
|---|---|
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | 20.12.2024 |

முதல் விசாரணை:

1. நான் முதலில் சத்தியமங்கலத்திலுள்ள அண்ணா நகரில் குடியிருந்து பார்லர் நடத்தி வந்தேன். தற்போது மலையடிப்புதூரில் குடியிருந்து பார்லர் நடத்தி வருகிறேன். நான் அண்ணா நகரில் குடியிருக்கும்போது எங்கள் வீட்டிற்கு எதிரில் சதீஷ்குமார் என்பவர் அவரது பெற்றோருடன் குடியிருந்து வந்தார். அப்போது சதீஷ்குமாரும், அவரது நண்பர்களான ரவிக்குமார், கோடீஸ்வரன் ஆகியோர் சேர்ந்து Share marketing தொழிலை அலையன்ஸ் புளூ என்ற பெயரில் நடத்தி வருவதாகவும், அவர்களுடைய வங்கிக் கணக்கில் தொழில் செய்ய இயலாது என்றும், என்னுடைய பெயரில் வங்கிக் கணக்கு ஏற்படுத்தி அதில் நாங்கள் தொழில் செய்துகொள்கிறோம் என்று சதீஷ்குமாரும், அவரது அம்மாவும் என்னிடம் கூறினார்கள்.

2. 2 நாட்கள் கழித்து ரவிக்குமார், கோடீஸ்வரன் ஆகியோர் சதீஷ்குமாரைப் பார்ப்பதற்காக அவர்கள் வீட்டிற்கு வந்திருப்பதாகக் கூறி அவர்கள் வீட்டிற்கு வரும்படி சதீஷ்குமாரின் அம்மா என்னிடம் கூறியதால் நான் அவர்கள் வீட்டிற்கு சென்றேன். தேதி ஞாபகம் இல்லை. 2013-ம் வருடம் நடந்தது. அப்போது அவர்கள் என்னிடம் நான் எதுவும் பணம் செலுத்தத் தேவையில்லை என்றும், எல்லாவற்றையும் அவர்களே பார்த்துக்கொள்வதாகவும் சொன்னார்கள். நான் ஒரு வாரம் கால அவகாசம் கேட்டிருந்தேன். சதீஷ்குமாரும் தொடர்ந்து என்னிடம் கேட்டுக்கொண்டே இருந்ததால் நானும் சரி என்று ஒப்புக்கொண்டு ICICI வங்கி, சத்தி கிளையில் எனக்கு வங்கிக் கணக்கு Open

செய்தேன். என்னுடைய வங்கி கணக்குப் புத்தகம், பாஸ் புக் மற்ற ஆவணங்களை சதீஷ்குமாரே வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டுவிட்டார்.

3. Account open செய்து ஒருவாரம் கழித்து சதீஷ்குமார், ரவிக்குமார், கோடீஸ்வரன் ஆகியோர்கள் என்னுடைய பார்லருக்கு வந்து என்னுடைய பெயரிலுள்ள வங்கிக் கணக்கிற்குண்டான 5 காசோலைகளில் என்னைக் கையெழுத்துப் போடச் சொன்னார்கள். நானும் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தேன். 18.11.2013-ம் தேதி சத்தி காவல் நிலையத்திலிருந்து எனக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு கோடீஸ்வரன் என்பவர் என்மீது புகார் கொடுத்துள்ளதாகவும், அதை விசாரிப்பதற்காக என்னை வரச்சொன்னார்கள். நானும், சதீஷ்குமாரிடம் சொன்னேன். அவரை அழைத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றேன்.

4. அங்கிருந்த கோடீஸ்வரன் நான் அவரிடம் ரூபாய் 20 லட்சம் கடன் வாங்கியுள்ளேன் என்றும், நான் திரும்ப செலுத்த வேண்டும் என்றும் கூறினார். பின்பு காவல் நிலையத்திலிருந்து சென்றுவிட்டனர். அதன்பின்பு சதீஷ்குமார் Share markting-ல் Loss ஆகிவிட்டதால் கோடீஸ்வரனும், ரவிக்குமாரும் சதீஷ்குமாரின் காசோலைகளையும், என்னுடைய காசோலைகளையும் எடுத்துச் சென்றுவிட்டதாக சதீஷ்குமார் என்னிடம் தெரிவித்தார். 19.11.2013-ம் தேதி ஐ.சி.ஐ.சி.ஐ வங்கிச் சென்று மற்ற காசோலைகள் குறித்து கடிதம் எழுதிக்கொடுத்து வந்தேன். ரவிக்குமாரும், கோடீஸ்வரனும் போலீஸ் மூலமாக வந்து நான் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று கூறி வந்தனர்.

5. 27.11.2013 அன்று நான் ஈரோடு எஸ்.பி. அலுவலகத்திலும், சத்தி காவல் நிலையத்திலும் சதீஷ்குமார், கோடீஸ்வரன் மற்றும் ரவிக்குமார் ஆகியோர்களின் மீது புகார் கொடுத்தேன். சதீஷ்குமார் எனக்குப் போன் செய்து நீதிமன்றத்தில் வாய்தாவிற்கு வரச்சொன்னபோதுதான் அவர்கள் இருவரும் என்மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவந்தது. அதன்பின்பு எனக்காக சதீஷ்குமாரே வழக்குரைஞர் நியமித்து வழக்கை நடத்தி வந்தார். சதீஷ்குமாரும், கோடீஸ்வரனும் பணம் பறிக்கும் எண்ணத்தில் இந்த வழக்கைப் போட்டுள்ளதாக

தெரியவந்ததால், அதன்பின்பு நானே வழக்குரைஞர் அமர்த்தி வழக்கை நடத்தி வருகிறேன்.

(எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )